முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1005

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.06.2022, வியாழக்கிழமை

1. பரபிரம்மமே அரங்கா வாழ்க
பரமானந்த சதாசிவ குருவே வாழ்க
தரணி எங்கும் ஞானவான்கள் படை
தாமுரைப்பேன் உருவாக்கி உலகை மாற்ற
2. உலகை மாற்ற அற்புதம் நிகழ்த்துகின்ற
ஓங்காரஞானியே அரங்கனே வாழ்கவாழ்க
வாழ்க என வாழ்த்தி ஆறுமுகன் யானும்
வழுத்திடுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 16 நாள், 30.06.2022 வியாழக்கிழமை)
3. தாழ்விலா உன் திருவடி பற்றும்
தரணியே உலகமாற்றமாக அடையக்கூடும்
ஊழ்வெல்லும் சக்தி மக்களுக்கு கூடி
உன் வழிதான் உலகோர் கடைத்தேற நேரும்
4. நேர்மை கொண்ட உன் தர்மமும் சன்மார்க்கமும்
நிலவுலகை மாற்றுவது உறுதிஉறுதி
வறுமை போக்கி உலகை பசிபிணியிலிருந்து
விரட்டிக்காப்பதும் உறுதிஉறுதி
5. உறுதிகொண்டு அரங்கன் உன் மார்க்கத்தை
உலக ஞானிகள் எல்லாம் பாதுகாத்து வருதல் காண
கருதிவந்து நீயே கதிஎன சரணாகதி
கலியுகத்தார் கண்டு விட மாற்றம் சடுதி காணும்
6. காணவே உலகத்தின் பேரிடரை எல்லாம்
கணத்தில் அரங்கன் நீ வேண்ட விரட்டியே
ஞானவான்கள் நிறைந்த பூமியாக
ஞானிகள் ஆட்சியாக மாற்றம் தந்தருள்வேன்
7. அருளவே அற்புதத்தை அரங்கனுள்ளே
ஆக்கமாக அனுதினமும் வரமாகத் தந்து
உலகோர் ஏற்கும் வண்ணம் சூட்சுமம்
ஆறுமுகன் உத்தமமாய் நடத்தி வருகின்றேன்
8. வருகவே உன்னை ஏற்றால் உலக மக்களுக்கு
வையகத்தில் அழியாமை என்கின்ற
பெருநிலை தெளிவுபட சடுதி வாய்க்கக்கூடும்
தேசமெல்லாம் ஞான பூமியாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–